சுற்றறிக்கை இல. 2018/01(i)

எனது இல. FE/111/2017/18
தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய.
2018.02.22

**அனைத்து அமைச்சுக்களினதும் செயலாளர்கள், மாகாண சபை பிரதம செயலாளர்கள் மற்றும்**
**இலங்கை மத்திய வங்கி ஆளுநர்,**
**அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளர் மற்றும் ஏனைய நியதிச்சட்ட ஆணைக்குழுக்களின் செயலாளர்கள்,**
**அனைத்து திணைக்களத் தலைவர்கள், மாகாண சபைகளின் அமைச்சுக்களின் செயலாளர்கள்,**
**மாகாண ஆளுநர்களின் செயலாளர்கள், மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுக்களின் செயலாளர்கள்,**
**அனைத்து கூட்டுத்தாபன மற்றும் நியதிச்சட்ட சபைகளின் தவிசாளர்கள்/ பொது முகாமையாளர்கள்**

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் - 10.02.2018
## தேர்தல் பணியாட் குழுவினர்களுக்கான கொடுப்பனவுகள்

மேற்படி தேர்தல் கடமைகளுக்கான கொடுப்பனவு சுற்றறிக்கையின் பின்வரும் பந்திகள் மற்றும் உப பந்திகளில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் திருத்தம் செய்யப்பட்டுள்ளதென்பதைத் தயவன்புடன் அறியத் தருகின்றேன். கொடுப்பனவு செய்வதற்கு முன்னர் இந்த திருத்தம் செய்யப்பட்ட விடயங்களை நன்கு வாசித்தறிந்து சரியாகக் கொடுப்பனவுகளைச் செய்யுமாறு உங்களது கணக்குப் பிரிவினருக்கு அறிவுறுத்தல் வழங்குவது பொருத்தமாகும்.

**05. விஷேட பிரயாணக் கட்டணங்கள் (மைல் கட்டணங்கள்.)**

5.3. I மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரினால் போக்குவரத்து நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாகச் செயலாற்ற அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள குறிப்பான ஒரு பதவிநிலை அலுவலரின் முன் அங்கீகாரத்திற்குட்பட்ட வகையில் தலைமை வாக்கெண்ணும் அலுவலர், வாக்கெண்ணும் அலுவலர், வாக்கெண்ணல் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர், வலய பொறுப்பு/ வட்டாரப் பொறுப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர், விஷேட ஒருங்கிணைப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலராக நியமனம் வழங்கப்பட்டுள்ள உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு <u>தனிப்பட்ட வாகனத்தையோ அல்லது வாழ்க்கைத் துணையின் வாகனமொன்றையோ</u> ஈடுபடுத்த சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் இப்பணியில் பிரத்தியேகக் காரணங்களுக்காக மணமுடிக்காத அலுவலர்களுக்கு தமது தந்தை, தாய், சகோதரர், சகோதரிகளுக்குரிய வாகனங்களையும் மணமுடித்த அலுவலர்களுக்கு வாழ்க்கைத் துணையின், தமது தந்தை, தாய், பிள்ளைகளுக்குச் சொந்தமான வாகனங்களையும் பயன்படுத்த முடியும். ஆதலால் அவ்வாறு எடுத்து வரப்படுகின்ற தனிப்பட்ட வாகனம் தொடர்பான தகவல்கள் V - 4 படிவத்தின் மூலம் நிரூபிக்கப்படின், தாபன விதிக்கோவையின் XIV ஆம் அத்தியாயத்தின் 8.2 இற்கமைய அவர்களுக்கு பெற்றோல் வாகனமொன்றிற்கு ஒரு கிலோ மீற்றருக்கு 12.00 ரூபா வீதமும் டீசல் வாகனமொன்றிற்கு ஒரு கிலோமீற்றருக்கு 8.00 ரூபா வீதமும் கொடுப்பனவு செய்ய முடியும்.

**07. படிகள்**

7.1. மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலரினால் எழுத்துமூல நியமனமொன்று வழங்கப்பட்டு, தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட அலுவலர்/ ஊழியர் கீழ்குறிப்பிடப்பட்டுள்ளவாறான வரவுச் சான்றிதழ்களூடாக நிரூபிக்கப்பட்டுமிருப்பின் அவர்களுக்கு ஒவ்வொரு பணிக்குமாக கீழ்குறிப்பிடப்பட்டவாறான படிகளைக் கொடுப்பனவு செய்ய முடியும்.

| பணியாட் குழுவினர் | கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய படிகள் ரூபா | வரவுச் சான்றிதழ் இலக்கம் |
|---|---|---|
| வலயங்களுக்குப் பொறுப்பு/ வட்டாரப் பொறுப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் | ரூபா 4,000.00 | CE 46 |
| சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் (வாக்கெடுப்பு நிலையம்) | ரூபா 3,750.00 | CE 19/1 |
| மேலதிக சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் (வாக்கெடுப்பு நிலையம்) | ரூபா 3,250.00 | CE 19/1 |
| விஷேட/ மேலதி கனிட்ட தலைமை தாங்கும் அலுவலர் (வாக்கெடுப்பு நிலையம்) | ரூபா 2,250.00 | CE 19 |
| கனிட்ட தலைமை தாங்கும் அலுவலர்/ எழுதுநர் (வாக்கெடுப்பு நிலையம்) | ரூபா 2,100.00 | CE 19 |
| அலுவலக கனிட்ட ஊழியர் (வாக்கெடுப்பு நிலையம்) | ரூபா 1,750.00 | CE 19 |

மேலும் இதில் குறிப்பிடப்பட்டுள்ள வலயப் பொறுப்பு/ வட்டாரப் பொறுப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் வாக்கெண்ணல் பணிகளின் ஒருங்கிணைப்பு மற்றும் மேற்பார்வைப் பணிகளில் ஈடுபட்டு நேரடியாக வாக்கெண்ணலில் ஈடுபட்டிருப்பின் CE 49 ஆம் இலக்க வரவுச் சான்றிதழொன்றின் மூலம் அது பற்றி உறுதிப்படுத்தப்படுமாயின், 7.5 இல் குறிப்பிடப்பட்டுள்ள வாக்கெண்ணல் பணிகள் மேற்பார்வை வலய உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் படியை கொடுப்பனவு செய்ய முடியும்.

வலயப் பொறுப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் வாக்கெண்ணல் பணிகளின் ஒருங்கிணைப்பு மற்றும் மேற்பார்வை கடமைகளில் ஈடுபட்டுள்ள போது மற்றும் அவ்வலுவலர்கள் நேரடியாக வாக்கெண்ணல் பணிகளில் ஈடுபட்டிராத போது அவ்வலுவலர்களுக்கு வாக்கெண்ணல் பணிகள் ஒருங்கிணைப்பு மற்றும் மேற்பார்வை தொடர்பில் CE 50 – SP இலக்கம் கொண்ட சான்றிதழொன்று விநியோகிக்கப்படுவதோடு அவ்வரவுச் சான்றிதழை குறித்த மாவட்டத் தேர்தல் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளல் வேண்டும். அதற்காக 2500.00 ரூபா படியொன்றை வலயப் பொறுப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு கொடுப்பனவு செய்ய முடியும். இச்சான்றிதழை குறித்த அலுவலர்களுக்கு விநியோகிக்குமாறு மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களின் அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கபட்டுள்ளது.

7.2. வாக்குப் பெட்டிகளின் விநியோகக் கடமை CE 47 என்ற இலக்கமுடைய அச்சிடப்பட்ட படிவத்திலான வரவுச் சான்றிதழலொன்றின் மூலம் நிரூபிக்கப்படின், தேர்தல் தினத்திற்கு முந்திய தினம் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கு வாக்குப் பெட்டிகள் மற்றும் வாக்குச் சீட்டுக்கள் என்பவற்றைக் கையளிக்கின்ற பணிகளிலீடுபட்ட அலுவலர்களுக்கு வாக்குப் பெட்டிகளைக் கையேற்றல் கடமை CE 48 என்ற இலக்கமுடைய அச்சிடப்பட்ட படிவத்திலான வரவுச் சான்றிதழொன்றின் மூலம் நிரூபிக்கப்படுமாயின் வாக்கெடுப்புத் தினத்தன்று பிற்பகலில் வாக்குப் பெட்டிகளாதியவற்றைக் கையேற்கும் பணியில் ஈடுபட்ட அலுவலர்களுக்கும் அவ்வொவ்வொரு தினத்திற்குமுரிய பணிகளுக்காக கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறான கொடுப்பனவுகளை மேற்கொள்ள முடியும்.

| பணியாட் குழுவினர் | விநியோகித்தல் | கையேற்றல் | மேலதிக படி ரூபா |
|---|---|---|---|
| உதவித் தெரிவத்தாட்சி அலுவலர | 1,500.00 | 2,500.00 | 750.00 |
| சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் | 1,250.00 | 2,000.00 | 400.00 |
| கனிட்ட தலைமை தாங்கும் அலுவலர் மற்றும் எழுதுநர் | 900.00 | 1,500.00 | 350.00 |
| அலுவலக உதவியாளர் | 800.00 | 1,200.00 | 300.00 |

CE 47 அல்லது CE 48 ஆகிய அச்சிடப்பட்ட படிவத்திலான வரவுச் சான்றிதழ்கள் தவிர்ந்த வேறு படிவங்களுக்கமைய வரவுச் சான்றிதழ்களை சமர்ப்பிக்கின்ற அலுவலர்களுக்கு இப்படிகளைக் கொடுப்பனவு செய்யலாகாது. விநியோகித்தல் பணியை மாத்திரம் ஆற்றிய அலுவலர்களுக்கு இந்த மேலதிகப் படியை கொடுப்பனவு செய்தல் கூடாது. மேலதிகப் படி கொடுப்பனவு செய்யப்படுவது பொருட்களாதியவற்றை தேர்தல் அலுவலர்களுக்கு கையளிக்கும் பணிகளுக்கு மேலதிகமான காலமொன்று செலவாகிய காரணத்தினாலாகும்.

7.5. மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரினால் முறையான எழுத்து மூல நியமனமொன்று (வாக்கெண்ணல் அலுவலர்களுக்கான L.B.E.33 என்ற படிவத்திலான நியமனமொன்று) வழங்கப்பட்டு வாக்கெண்ணல் நிலையமொன்றில் வாக்கெண்ணல் அலுவலர் ஒருவராக/ ஊழியரொருவராக பணியாற்றியோர் கீழ்வருமாறான வரவுச் சான்றிதழ்கள் மூலம் அது பற்றி நிரூபிப்பார்களாயின் அவர்களுக்கு ஒவ்வொரு பணிக்காக பின்வருமாறு படியைக் கொடுப்பனவு செய்ய முடியும்.

| பணியாட் குழுவினர் | படி ரூபா | வரவுச் சான்றிதழ் இலக்கம் |
|---|---|---|
| தலைமை வாக்கெண்ணும் அலுவலர்/ உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்/ சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் | 4,500.00 | CE 50 |
| வாக்கெண்ணல் அலுவலர்/ சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் | 4,350.00 | CE 54/CE49 |
| வாக்கெண்ணல் பணி மேற்பார்வை வலயப் பொறுப்புத் தெரிவத்தாட்சி அலுவலர் | 4,350.00 | CE 49 |
| மேலதிக சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் | 3,000.00 | CE 49 |
| கனிட்ட தலைமை தாங்கும் அலுவலர்/ எழுதுநர் | 2,500.00 | CE 49 |
| *கனிட்ட ஊழியர் | 1,500.00 | CE 49 |

*சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரால் அழைத்து வரப்படுகின்ற உதவியாளர் எனப்படும் அலுவலக கனிட்ட ஊழியருக்கு வாக்கெண்ணும் நியமனக் கடிதமாக அதற்காக சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் வழங்கிய கடிதம் போதுமானதென்பதோடு அதனை தேர்தல்கள் அலுவலகத்தில் அல்லது உதவித் தெரிவத்தாட்சி அலுவலரிடம் புறக்கையெழுத்திட்டுக்கொள்ள வேண்டும். சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரினால் அழைத்து வரப்படுகின்ற உதவியாளருக்கு CE/19 படிவத்திலான வரவுச் சான்றிதழுக்கும் படியைக் கொடுப்பனவு செய்ய முடியும்.

வாக்கெண்ணல் பணிகளுக்காக CE/19 ஆம் இலக்க வரவுச் சான்றிதழுக்கு வாக்கெண்ணல் படியை செலுத்தக் கூடாது. அதற்காக தாம் பணியாற்றிய மாவட்டத் தேர்தல் அலுவலகத்திற்கு தொலைபேசி ஊடாகவேனும் அறிவித்து வாக்கெண்ணல் பணிகளில் ஈடுபட்டமையை உறுதி செய்து கொள்வதற்காக CE 49 ஆம் இலக்க வரவுச் சான்றிதழொன்றை தொலைநகல் மூலமேனும் பெற்றுக்கொண்டு சமர்பிக்குமாறு உரிய அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கவும். இது தொடர்பில் மாவட்ட மேலதிக/ பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

7.7. மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலரின் எழுத்து மூல நியமனமொன்று வழங்கப்பட்ட CE 52 ஆம் இலக்க அச்சிடப்பட்ட படிவத்திலான வரவுச் சான்றிதலொன்றின் மூலம் வரவு நிரூபிக்கப்படுமாயின் வாக்கெடுப்புப் பிரிவு/ பிரதேச செயலக மட்டத்தில் தாபிக்கப்பட்ட பிரதேச இணைப்பு அலுவலகமொன்றில் பணியாற்றிய உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்/ கனிட்ட தலைமை தாங்கும் அலுவலர், எழுதுநர் அல்லது அலுவலக கனிட்ட ஊழியர்களுக்கு பின்வருமாறு கொடுப்பனவு செய்ய முடியும். பிரதேச செயலாளரின் மற்றும் உதவி பிரதேச செயலாளரின் படியை குறித்த மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களினால் கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கையெடுக்கப்படும்.

| பணியாட் குழுவினர் | கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய படிகள் | *மேலதிகப் படி | வரவுச் சான்றிதழ் இலக்கம் |
|---|---|---|---|
| பிரதேச இணைப்பு அலுவலகமொன்றின் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் | ரூபா 4,000.00 + | 2,250.00 | CE 52 |
| சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் | ரூபா 3,250.00 + | 2,000.00 | CE 52 |
| கனிட்ட தலைமை தாங்கும் அலுவலர்/ எழுதுநர் | ரூபா 2,500.00 + | 1,250.00 | CE 52 |
| அலுவலக கனிட்ட ஊழியர் | ரூபா 1,500.00 + | 750.00 | CE 52 |

* மேலதிக படியைச் செலுத்த வேண்டியது உண்மையாக 2018.02.10 ஆம் திகதி பி.ப 6.00 மணியின் பின்னரும் கடமைகளில் ஈடுபட்டிருந்தால் மாத்திரமே

7.8. CE 53 என்ற இலக்கத்தையுடைய அச்சிடப்பட்ட படிவத்திலான வரவுச் சான்றிதழொன்றின் மூலம் நிருபிக்கப்படின் மாத்திரம், வாக்கெடுப்பு மற்றும் வாக்கெண்ணல் தொடர்பான குழுக்களில் கடமையாற்றியமைக்காக (போக்குவரத்து, நலன்புரி, பொது வசதிகள் போன்ற குழுக்களில்) கடமையாற்றிய பணியாட் குழுவினர்களுக்கு அவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ள பதவிகளுக்கமைய 7.2 மற்றும் 7.5 இல் குறிப்பிடப்பட்டுள்ள படிகளை அவர்கள் பணியாற்றிய தேர்தல்கள் அலுவலகத்தினூடாக செலுத்துமாறு மேலதிக/ பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு விஷேட அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வலுவலர்களுக்கு/ ஊழியர்களுக்கு தேர்தல் கடமைகளின் பதவிகளுக்கமைய மாவட்ட மேலதிக/ பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களால் உரிய படியைக் கொடுப்பனவு செய்ய நடவடிக்கையெடுக்கப்படும். ஆதலால் பொது 35 வவுச்சர் ஒன்றில் அலுவலரின்/ ஊழியரின் பெயர் மற்றும் ஆற்றிய பணிகள் தொடர்பாக குறிப்பிட்டு அதில் புறக்கையெழுத்திட்டு உரிய மாவட்டத் தேர்தல் அலுவலகத்திற்கு வவுச்சர்களை கையளிக்குமாறு அவ்வலுவலர்கள் மற்றும் ஊழியர்களுக்கு அறிவுறுத்தல் வழங்குதல் வேண்டும்.

7.9. CE 56 என்ற இலக்கத்தையுடைய அச்சிடப்பட்ட படிவத்திலான வரவுச் சான்றிதழொன்றின் மூலம் நிருப்பிக்கப்படின் மாத்திரம் மண்டப இணைப்பு பணியாட் குழுவினர்களுக்கான படியொன்றை கொடுப்பனவு செய்யமுடியும். இப்படியை அவர் சேவையாற்றிய தேர்தல்கள் அலுவலத்தினூடாக செலுத்துமாறு மேலதிக/ பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு விஷேட அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வலுவலர்களுக்கு செலுத்த வேண்டிய படி எவ்வளவு என்பது தொடர்பாக மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளமையினால் மாவட்ட மேலதிக/ பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களால் உரிய படியைக் கொடுப்பனவு செய்ய நடவடிக்கையெடுக்கப்படும். ஆதலால் பொது 35 வவுச்சரொன்றில் அலுவலரின் பெயர் மற்றும் ஆற்றிய பணி தொடர்பாகக் குறிப்பிட்டு அதில் பின்பக்கம் கையெழுத்திட்டு குறித்த மாவட்டத் தேர்தல் அலுவலகங்களுக்கு வவுச்சர்களை கையளிக்குமாறு அவ்வலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கவும்

7.10. CE 57 படிவத்திலான வரவுச் சான்றிதழொன்றின் மூலம் நிருபிக்கப்படுமாயின் மாத்திரம் ஒவ்வொரு சபைகள் மட்டத்தில் நியமனம் செய்யப்பட்ட விஷேட ஒருங்கிணைப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு படியொன்றைக் கொடுப்பனவு செய்ய முடியுமென்பதோடு இப்படியை அவர் பணியாற்றிய தேர்தல் அலுவலகத்தினால் கொடுப்பனவு செய்வதற்கு மேலதிக/ பிரதி/ உதவி தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு விஷேட அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வலுவலர்களுக்கு கொடுப்பனவு செய்ய வேண்டிய படி எவ்வளவு என்பது தொடர்பாக மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளமையினால் மாவட்ட மேலதிக/ பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களால் குறித்த படியைக் கொடுப்பனவு செய்ய நடவடிக்கையெடுக்கப்படும். ஆதலால் பொது 35 வவுச்சர் ஒன்றில் அலுவலரின் பெயர் ஆற்றிய பணிகள் தொடர்பாக குறிப்பிட்டு அதன் மறுபக்கத்தில் கையெழுத்திட்டு உரிய மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்திற்கு கொடுப்பனவு வவுச்சரோடு சமர்பிக்குமாறு குறித்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்க வேண்டும். கொழும்பு மாவட்டத்தின் அரச அலுவலகங்களின் அலுவலர்கள் இப்பணிகளில் ஈடுபட்டிருப்பின் தேர்தல் செயலகத்திற்கு பொது 35 வவுச்சர் மற்றும் போக்குவரத்துச் செலவு வவுச்சர் சகிதம் வவுச்சர்களை சமர்பித்து உரிய படியை பெற்றுக் கொள்ள முடியும்.

CE 53, CE 56 மற்றும் CE 57 படிவங்களிலான வரவுச் சான்றிதழ்களுக்கு உரிய படியை தமது நிரந்தர கடமை நிலையத்திலிருந்து செலுத்தக் கூடாது. அவ்வாறான கொடுப்பனவுகள் மீளளிப்புச் செய்யப்பட மாட்டாது.

**தேர்தல் ஆணைக்குழுவின் கட்டளைக்கமைய**

**ஆர்.எம்.ஏ.எல் ரத்நாயக்க**
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்/
பணிப்பாளர் நாயகம்

பிரதிகள் :-

01. கணக்காய்வாளர் நாயகம் - அறிந்து கொள்வதற்காக
02. தலைமை அலுவலகத்தின் அனைத்து பதவிநிலை அலுவலர்கள்
03. மேலதிக/ பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்கள்

(02, 03) அறிந்து கொள்வதற்கும் இச்சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கமைய அலுவல்களை மேற்கொள்வதற்காக.